# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.588/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.3 |
| Name | : | டேவிட் ராஜ்குமார், உதவி ஆய்வாளர்,<br>பொன்னூர் காவல் நிலையம். |
| Father's Name | : | த.பெ.சின்னப்பன் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 55 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 10.04.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பொன்னூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரனை அதிகாரிசேகர் பணி மாறுதலில் சென்றுவிட்டார். அதனால் அவர்களுக்கு நீதிமன்ற அழைப்பானைகள் சார்பு செய்ய இயலவில்லை. நான் தொடர் பணியில் இருப்பதால் அவர்களது கையெழுத்துகள் எனக்கு தெரியும். நான் கோப்புகளின் அடிப்படை யில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 15.01.2019ம் தேதி அ.சா.1னிடம் புகார் பெற்று நிலைய குற்ற எண்.18/2019 இ.த.ச பிரிவுகள். 279, 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆகும்.

2) சம்பவ சாட்சிகளாக தண்டபாணி, மணிகண்டன், ஆறுமுகம், ஏழுலை, உத்திரபாண்டி ஆகியோர்களை தனித்தனியே விசாரனை செய்து வாக்கமூலம் பதிவு செய்துள்ளார்.

3) சம்பவ இடத்தில் சாட்சிகள் பாலகிருஷ்ணன், ராஜி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகும். ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வரைபடம் அ.தா.சா.ஆ.4 ஆகும்.

4) இறந்துபோன நபருக்கு பிரதத்தின்மீது பிரத விசாரணை அறிக்கை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது. அது அ.த.சா.ஆ.5ஆகும்.

5) இறந்துபோன நபருக்கு சடல கூராய்வு செய்த மருத்துவரை விசாரனை செய்து பிரேத கூராய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த சடல கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6ஆகும்

6) இவ்வழக்கில் விபத்துக்கு உட்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் டி.என்.25எ.வி.1141 ஈரோஹண்டா என்கிற வாகனத்தை அதன் ஓட்டுனர் கோதண்டராமன்உரிமத்துடன் ஆஜர்படுத்த மோட்டார் வாகன ஆய்வாளர் மோகன் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. அந்த ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். அதில் வாகன விபத்து எந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும், முன்புற வலது மற்றும் இடது இன்டிகேட்டர்ஸ் உடைந்த நிலையில் இருந்தது. வலது பம்பர், வலது புட்ரெஸ்ட் சேதம் ஏற்பட்டிருந்தது. பின்புற இன்டிகேட்டர் உடைந்து இருந்தது. ஆண்டில் பார் உடைந்திருந்தது.

7) எதிரி 15.02.2019ம் தேதி கைது செயயப்பட்டு நிலைய ஜாமினில் விடுவிக்கப்பட்டார். வழக்கின் புலன் விசாரனை முடித்து எதிரி மீது 279, 304(A) இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் அ.த.சா.ஆ. 6 மற்றும் 7 குறீயீடு செய்ய பிரிவு 294 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பில' ஆட்சேபனை இன்றி அனுமதிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரனை**

வழக்கில் புலன் விசாரனை அதிகாரியுடன் நான் பணி செய்தது கிடையாது. வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது. ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். இறந்து போனவருக்கு இழப்பீடு பெறுவதற்காக தான் எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புலன் விசாரணையின் போது எந்த சாட்சியும் எதிரிதான் சம்பந்தபட்ட வண்டியை ஓட்டினார் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சம்பந்தபட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது. என்றால் சரியல்ல அதனால் தான் வழக்கின் ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு கால தாமதமாக அனுப்பட்டது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்விற்கும் கால தாமதமாக அனுப்பபட்டு உள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால்தான், கவனம் இன்மையால் தான் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தன்னிச்சையாக விபத்தில் இறந்துபோன நபர் விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல. எதிரி குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

// **உண்மை நகல்** //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.